2017 மார்ச் 22]

உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த இடம் இன்னமும் தனியார் வசமே இருந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்த இடத்தைப் பெற்றுத் தருவீர்களேயானால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நாங்கள் நிழற் குடை அமைப்பதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அந்த இடத்தை நிரந்தரமாக மீட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையம் அமைக்கக்கூடிய இடம் தனியார் வசம் இருந்தது.* Encroachment *என்றுதானே சொன்னீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்த இடத்தில் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அப்படிப்பட்ட பிரச்சினை இருந்தால் அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்யும். அதேபோல, பேருந்து நிலையம் அமைப்பதைப் பொறுத்த அளவில், சம்பந்தப்பட்ட மாநகராட்சி அல்லது நகராட்சியில் நிதிப் பிரச்சினை இருந்தாலும்கூட வங்கி மூலமாக ஏற்பாடு செய்வதில் நிதி ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆக, அந்த இடத்தைப் பொறுத்த அளவிற்கு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இருந்தால் துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

ஓய்வுக் கூடம்

***4013—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மீன் வளம், நிதி, மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2017 மார்ச் 22

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களில் கட்டப்பட்டிருக்கும் மீனவர்களுக்கான ஓய்வுக் கூடங்களைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிள்ளியூர் தொகுதி, கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு 17 மீனவர் ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஓய்வுக் கூடங்களைப் புதுப்பிக்கும் திட்டம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

முற்பகல் 10—40

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட 16 கடலோர கிராமங்களில் கிட்டத்தட்ட 18 மீனவர்களுக்கான ஓய்வுக் கூடங்களில் மீனவர்கள் ஓய்வு எடுப்பதற்காகவும், மீன் வலைகளைப் பழுது பார்ப்பதற்காகவும், வலைகளைப் பின்னுவதற்காகவும், தூண்டில் அமைப்பதற்காகவும், தொழில் தடவாளங்களைப் பாதுகாப்பதற்காகவும், கடலினுடைய சீதோஷ்ண நிலையைக் கண்டறிவதற்காகவும், ஓய்வறைகளைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இவை அனைத்தும் போதிய பராமரிப்பின்றி பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. கடல் உப்புக் காற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் புதுப்பிப்பதோடு மட்டுமல்லாமல் மக்களின் நலன் கருதி, புதிய ஓய்வுக் கூடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கிள்ளியூர் தொகுதியில் மீனவர்களுக்கான ஓய்வுக் கூடங்களைப் புதுப்பிப்பது குறித்து சில கருத்துகளை நம்முடைய சட்டமன்ற*

உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பொதுவாகவே, ஒரு புதிய concept*–ஆக அரசின் பங்கோடு ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்திலும்* landing centre *அதாவது தங்குதளத்திலும்,* Management Committee, *அதாவது தங்குதள மேலாண்மைக் குழு, அதேபோல மீன்பிடித் துறைமுக மேலாண்மைக் குழு உள்ளன. இந்த ஒவ்வொரு குழுவும் அந்தந்த இடத்தில் கூடும்போது, அரசு மற்றும் மீனவர்கள் அதாவது* stakeholders, *மீன்பிடி சார்ந்த* allied activities *தொழில் செய்கின்றவர்கள் அவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து, அவர்களை ஈடுபடுத்துவதன்மூலம்தான் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படும், அவர்கள் செய்ய வேண்டியது என்ன, அதற்கு அரசினுடைய நிதியுதவி எவ்வளவு தேவை இருக்கும், அதேபோன்று அரசு முழுமையான அளவுக்கு செய்ய வேண்டிய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும். இந்தக் கேள்வி வந்தபோதுகூட உடனடியாக* Executive Engineer *அவர்களை அந்தத் தொகுதிக்கு அனுப்பி, அந்தப் பகுதியைப் பார்த்தபோது, அந்தக் கட்டடத்தைப் பொறுத்தவரைக்கும் வலுவாக உள்ளது. சுண்ணாம்பு அடிக்க வேண்டும், அது ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி அந்த இடத்திலே அதுபோன்ற ஒரு நிலை* facelift *அந்த* landing centre *கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தால் நிச்சயமாக அரசு அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

தென்னை நாற்றுப் பண்ணை

***8212—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—